பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 12 செவ்வாய்க்கிழமை 27.12.2022 கதிர் 303

## 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்




ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது 2

# பருத்தித்துறை நகர சபையை முடக்க முன்னணியும் ஈ.பி.டி.பி.யும் கூட்டுச் சதி

### புதிய தவிசாளர் தெரிவு கோரம் இன்மையால் ஒத்திவைப்பு







யாழ்., வடமராட்சி, பருத்தித்துறை நகர சபைக்கான புதிய தவிசாளர் தெரிவு கோரம் இன்மையால் ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த 5 ஆம் திகதி அன்று பருத்தித்துறை நகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட வேளை ஒரு மேலதிக வாக்கால் அது தோற்கடிக்கப்பட்டிருந்த நிலையில் 9

## மாணவி பரிதாப மரணம்

முல்லைத்தீவு, மாஞ்சோலைப் பகுதியில் மாணவி ஒருவர் வாகனத்திலிருந்து குதித்து படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு, முறிப்பு பகுதியைச் சேர்ந்த 15 வயதான மாணவியே இவ்வாறு 2

## சில்லுக்குள் சேலை மாட்டி பெண் சாவு!

மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் சேலைத்தலைப்பு சிக்குண்டதால் வீதியில் தவறி வீழ்ந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ். கோப்பாய் மத்தியைச் சேர்ந்த நாகேஸ்வரி சோதிலிங்கம் (வயது – 60) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தாய், மகள், பேரப்பிள்ளை என 5 பேர் மோட்டார் சைக்கிளில் இருபாலையிலுள்ள தேவாலயத்துக்குச் சென்று வீடு திரும்பும்போது, தாயின் சேலை 2

## முல்லையில் கொள்ளை!

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் நகரப் பகுதிக்கு அண்மையாக வீட்டில் தனிமையில் இருந்தவரைக் கட்டிவைத்துவிட்டு நகைகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டில் தனிமையிலிருந்த வயோதிபர், தொலைக்காட்சி பார்த்துக் 9

## 3 நிலக்கரிக் கப்பல்கள் அடுத்த மாதம் நாட்டுக்கு

### மின் தடை நேரத்தில் மாற்றம் வரக்கூடும்



நுரைச்சோலை அனல்மின் நிலையத்துக்கான மூன்று நிலக்கரிக் கப்பல்கள் அடுத்த மாதம் நாட்டை வந்தடையும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஊடகங்களிடம் இன்று தெரிவித்தார்.

அந்தவகையில் குறித்த கப்பல்கள் ஜனவரி மாதம் 05, 09 மற்றும் 16 ஆம் திகதிகளில் நாட்டை வந்தடையும் என்று எதிர்பார்ப்பதாகவும் 9

## தேய்பிறையாக மாறி அமாவாசையை நோக்கிச் செல்வது போல் கூட்டமைப்பு

### தலைமை மீது தவராசா கடும் சீற்றம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது தேய்பிறையாக மாறி, அமாவாசையை நோக்கிச் செல்வதுபோன்றுஇருக்கின்றது. இதனால் ஏற்படப்போகும் இருள் கட்சிக்கு மாத்திரமல்ல தமிழ் மக்களுக்கும்தான்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் 2

## புகைப்பிடித்தல், மதுப் பாவனையால் இலங்கையில் நாளாந்தம் 110 பேர் பலி



இலங்கையில் புகைப்பிடித்தல் மற்றும் மதுபானப் பாவனையால் நாளாந்தம் சுமார் 110 பேர் பலியாகின்றனர்.

புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய ஆணையம், நாட்டில் உள்ள போக்கு மற்றும் இத்தகைய நடைமுறைகளைத் தடுக்க கடுமையான சட்டங்களின் அவசியத்தை எடுத்துரைத்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு 2

## இரு ரயில் பெட்டிகளுக்கு நடுவே சிக்கிய இளைஞர்

### காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில்

மருதானையிலிருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த ரயிலில் அக்குரஸ்ஸ நோக்கிப் பயணித்த இளைஞர் ஒருவர் இரண்டு ரயில் பெட்டிகளுக்கு நடுவே சிக்கியிருந்த நிலையில் மீட்கப்பட்டு பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் 2

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமை முயற்சிக்கு வடக்கு - கிழக்கு சிவில் சமூகம் அமோக வரவேற்பு




தமிழ் மக்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்த ஒரு விடயத்தை இப்போதாவது உணர்ந்து நிறைவேற்றிக்கொள்ளமுன்வந்துள்ளார்கள். இது உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஒருங்கிணைவாக மாத்திரம் இல்லாமல் தொடர்ச்சியாகத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியாகச் செயற்படவேண்டும். நிச்சயமாக இந்த நல்லமுயற்சியை முறியடிக்க – குழப்ப தீய சக்திகள் முயலும். அதையும் முறியடித்துஇந்தஒற்றுமைதொடரவேண்டும்.

–இவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தளமாகக் கொண்டு செயற்படும் சிவில் அமைப்புக்கள், மதத் தலைவர்கள் தெரிவித்தனர்.

தமிழ்த்தேசியக் கட்சிகளின் தலைவர்கள் கடந்த சனிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில் சந்திப்பு நடத்தியிருந்தனர். 9

## மாணவி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்துள்ளார் என்று முல்லைத்தீவுப் பொலிஸார் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

முறிப்பிலிருந்து பாடசாலை நிகழ்வுக்காக மாஞ்சோலைக்கு செல்வதற்கு, வீதியால் சென்ற வானத்தை மறித்து அதன் பின்பக்கத்தில் மாணவனும், மாணவியும் ஏறியுள்ளனர்.

அவர்கள் இறங்கவேண்டிய இடத்தில் வாகனம் நிறுத்தாமல் சென்றதைத் தொடர்ந்து மாணவனும், மாணவியும் வாகனத்திலிருந்து குதித்துள்ளனர். இதனை அவதானிக்காமல் வாகனம் சென்றுள்ளது.

வாகனத்திலிருந்து குதித்ததில் தலையில் படுகாயமடைந்த மாணவி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கிருந்து மீண்டும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். மாணவன் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றார்.

உயிரிழந்த மாணவியின் சடலம் உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## இரு ரயில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேர்க்கப்பட்டுள்ளார். ரயில் பெட்டிகளுக்கு நடுவே இளைஞர் சிக்கியிருப்பதைக் கண்டு, சக பயணிகள் ரயிலை நிறுத்தி, காயங்களுடன் இளைஞரை மீட்டுள்ளனர்.

இதையடுத்து அவர் அம்புலன்ஸ் மூலமாக பலப்பிட்டிய ரயில் நிலையத்திலிருந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்று ரயில் நிலையத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

அக்குரஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 5 மாவட்டங்களி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரி வித்துள்ளது.

இதன்படி கண்டி மாவட்டத்தில் ஹஹதும்பர, உடுதும்பர, உடுநுவர, கங்க இஹல கோரள, ஹஹத ஹேவா ஹெட, கங்கவட கோரள, ஹரிஸ்பத்து, தும்பனே, பூஜாபிட்டிய, யட்டிநுவர ஆகிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கும், கேகாலை மாவட்டத்தில் கலிகமுவ, ரம்புக்கன, மாவனெல்ல, புளத்கொஹூபிட்டிய, கேகாலை, ருவன்வெல்ல ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கும் மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், குருநாகல் மாவட்டத்தில் ரிதிகம, பொல்கஹவெல பிரதேச செயலக பிரிவுகளுக்கும், மாத்தளை மாவட்டத்தின் இரத்தோட்டை, மாத்தளை, யடவத்த, உக்குவெல, நாவுல பள்ளேகம பிரதேச செயலக பிரிவுகளுக்கும், நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை பிரதேச செயலக பிரிவுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## சில்லுக்குள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மோட்டார் சைக்கிளின் பின் சில்லினுள் சிக்கியுள்ளது. இதனால் அவர் வீதியில் விழுந்துள்ளார்.

உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் அவர் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

## புகையிலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கருத்துத் தெரிவித்த அந்த அமைப்பின் தலைவர் கலாநிதி சமாதி ராஜபக்ச, சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் மதகுருமார்களும் சட்டவிரோத போதைப் பொருள் மற்றும் மதுபான பாவனையை ஊக்குவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

புகைப்பிடித்தல் மற்றும் புகையிலை பாவனையால் வருடாந்தம் சுமார் 40 ஆயிரம் பேர் இறக்கின்றனர்.

இத்தகைய குடும்பங்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. சில சமயங்களில் இதுபோன்ற மரணங்கள் பல்வேறு சமூகப் பிரச்சினைகளை உருவாக்குகின்றன – என்றார்.

வரிகளைத் திருத்தவும், புகையிலை மற்றும் மதுபானப் பயன்பாட்டுக்கு எதிராகக் கடுமையான சட்டங்களை இயற்றவும் அவர் முன்மொழிந்தார்.

## தேய்பிறையாக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தெரிவித்தார்.

'சூம்' செயலி ஊடாக நேற்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருமதி அனந்தி சசிதரன், அருந்தவபாலன் போன்று பலரை தமிழரசுக் கட்சிதான் வெளியேற்றியது. எல்லோரும் பிரிந்து செல்கின்றார்கள். ஆரம்பத்தில் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள், பின்பு 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்போது 10 பேர் என்று கூட்டமைப்பின் ஆதரவுசுருங்கிவருகின்றது. கூட்டமைப்பு இப்போது தேய்பிறையாக மாறி, அமாவாசையை நோக்கிச் செல்வது போன்று இருக்கின்றது. இதனால் ஏற்படப்போகும் இருள் கட்சிக்கு மாத்திரமல்ல தமிழ் மக்களுக்கும்தான்.

எமது கட்சி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியில் மூன்றாம் இடத்தையே பெற்றது. முதலிடத்தில் சிங்கள தேசியக் கட்சி பெற்றது. நாம் இன்னமும் பிரிந்து – பிளவுபட்டு நிற்போம் என்றால் உடுப்பிட்டித் தொகுதியில் கிடைத்த இடம்தான் எல்லாத் தொகுதிகளிலும் கிடைக்கும். வீட்டுக்குத்தான் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நிலைமை இப்போது மாறிவிட்டது. நாம் பிளவுபட்டுநிற்பதால் கூட்டமைப்புமீதுமக்கள்நம்பிக்கையை இழந்துவிட்டோம்.

இவ்வளவுக்கும் காரணம் கூட்டமைப்பின் தலைமைதான். ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் தான்தோறித்தனமான முடிவுகளுக்கு இடம்கொடுத்தமையால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது.

எதிர்காலத்தில் கட்சியில் ஒரு நிபுணத்துவக் குழுவை அமைத்து கட்சியை ஜனநாயகப் பண்பாக மாற்றுவோம். முதலில் தமிழரசுக் கட்சியைச் சீர்திருத்த ஒரு நிபுணர் குழுவை அமைப்போம்.

தமிழரசுக் கட்சியை சீராக்கி விட்டு அதன் பின்னர் ஏனைய கட்சிகளை விமர்சிப்பதே பொருத்தம். தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்தே இனிவரும்தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டும் – என்றார்.

விளம்பரங்களுக்கு:-
தொலைபேசி இலக்கம்:-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## தேவையற்ற முறைப்பு

சில சமயங்களில் நமது அரசியல்வாதிகள் நிழலோடு யுத்தம் புரிகின்றார்கள். தேவையற்ற தரப்புகளுடன் வீண் சச்சரவுகளை உருவாக்க முயலுகின்றார்கள்.

முன்னர் இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் நோர்வே நாடு அனுசரணைப் பணி வகித்தபோது, அந்நாட்டின் சார்பில் அந்த விடயங்களில் சம்பந்தப்பட்டவர் எரிக் சொல்ஹெய்ம். அதன் காரணமாக வடக்கு, கிழக்கு தமிழர் தரப்போடும், தென்னிலங்கை சிங்கள அரசுத் தலைமையுடனும், பிற கட்சிகளுடனும் சுமார் ஒரு தசாப்த காலம் நெருங்கி பழகியவர். அதனால் அத்தகைய தரப்புகளுடன் நெருங்கிய பரிச்சயம் கொண்டவர்.

பின்னர் சூழலியல் தொடர்பான ஐ.நா. பணிகளுடன் சர்வதேச மட்டத்தில் சேர்ந்து செயற்பட்டவர்.

அதன் காரணமாக அவரை தமது சூழலியல், கால மாற்றங்கள் தொடர்பான சர்வதேச ஆலோசகராக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினும், அவரைத் தொடர்ந்து இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் நியமித்திருக்கின்றார்கள்.

அதனால் அடிக்கடி அவர் தென்னிந்தியா மற்றும் இலங்கைக்கு வந்து போவது வழமை. அத்தகைய வருகைகளின் போது, தமது முன்னைய நட்புத் தொடர்புகளோடு அவர் கலந்துரையாடி வருகின்றார். அதில் தப்பு ஏதும் இருப்பதாகச் சொல்வதற்கு இடம் இல்லை.

எனினும் இலங்கையில் தமது பங்கு, பணி, அதையொட்டிய விடயங்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மிகவும் கவனமாகவும், சிரத்தையாகவும் இருக்கின்றார் என்பதும் உண்மைதான்.

'இலங்கை நாட்டின் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் நான் ஆற்றுவதற்கு எந்த பணியும் இல்லை, உரிமையும் இல்லை, அதைச் செய்யும் அதிகாரமும் எனக்கு ஏதுமில்லை' – என்ற சாரப்பட அவரே சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு நேரடியாகக் கருத்தும் கூறியிருந்தார்.

அத்தகையவர்களோடு ஒரு யுத்த நிலையை அல்லது துவந்தம் ஒன்றை ரெலோ கட்டவிழ்த்து விட்டிருப்பது அபத்தமானது; அர்த்தமற்றது; அவசியமற்றது.

இனப்பிரச்சனைக்கான தீர்வு விடயங்களில் சொல்ஹெய்ம் தலையிடுவதற்கு ஓர் அதிகாரமும் இல்லை என்ற சாரப்பட ரெலோவின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் பகிரங்க அறிக்கை விட்டிருக்கின்றமை தேவையற்றது.

தமிழ் மக்களின் அரசியல் விவகாரங்களில் அழையா விருந்தாளியாக சொல்ஹெய்ம் கருத்து சொல்வது தேவையற்றது எனவும் சுரேந்திரன் குறிப்பிட்டு இருக்கின்றார்.

சரி, பிழை வேறு. சொல்ஹெய்ம் தமது பழைய தொடர்பு காரணமாக பலரையும் சந்திக்கின்றார். தமது அனுபவத்தின் அடிப்படையில் அவரவர்களுடன் உரையாடுகின்றார். அது அவரது உரிமை. சுதந்திரம்.

அதைத் தாண்டி இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அவர் தலையிடவில்லை. தலையீடு செய்யும் போக்கை அவர் வெளிப்படுத்தவும் இல்லை. அந்தப் பொறுப்பு தம்முடையது அல்ல என்று அவர் உறுதியாகக் கூறியும் வருகின்றார். அத்தகையவரோடு ஒரு களமுனையை தமிழர் தரப்பு திறக்க முயல்வது தேவையற்ற அபத்த வேலையாகும்.

# வடிகாலமைப்பு பராமரிக்கப்படாமையே கண்டி வெள்ளத்தில் மூழ்க காரணம்!

## லக்ஷ்மன் கிரியெல்ல சாடல்



கண்டி ரயில் நிலையம் உள்ளடங்களாக நகரின் சில இடங்கள் வெள்ளத்தில் மூழ்குவதற்கு வடிகால் அமைப்பு முறையாக பராமரிக்கப்படாமையே காரணம் என எதிர்கட்சியின் பிரதம அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அண்மையில் பெய்த அடை மழை காரணமாக கண்டி மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக கண்டி ரயில் நிலையம், மத்திய மாகாண கல்வி திணைக்கள கட்டடம் மற்றும் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

இந்தநிலையில் இதுதொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# அரசமைப்பு பேரவைக்கு சிவில் பிரதிநிதி நியமனம்!

அரசமைப்பு பேரவைக்கு சிவில் சமூக பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் நாளை மறுதினம் (வியாழக்கிழமை) எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

21 ஆவது அரசமைப்பு திருத்தத்தின்படி நிறுவப்படும் அரசமைப்பு பேரவையில் பத்து உறுப்பினர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி அரசமைப்பு பேரவையி சிவில் சமூகப் பிரதிநிதிகளை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் அண்மையில் கோரப்பட்டன.

இந்நிலையில்கிட்டத்தட்ட120விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

# யூரியா உர விநியோகம் 80 வீதம் நிறைவடைவு!

## விவசாய அமைச்சு தெரிவிப்பு

விவசாயிகளுக்கு தேவையான யூரியா உரத்தின் 80 சதவீத விநியோகம் நிறைவடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பெரும்போகத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரத்தை அரசாங்கம் விநியோகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மாகாண ரீதியில் நடைபெற்ற ஒளிவிழா!







வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாடலுவல்கள் திணைக்களம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்தும் ஒளிவிழா நவாலி சென்பீற்றர் தேவாலயத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன், புனித பேதுரு பாவிலு ஆலயத்தின் பங்குத் தந்தை அருட்பணி அன்ரனிதாஸ் இறையாசி வழங்கியிருந்தார்.

ஒளிவிழா நிகழ்வில் யேசுகிறிஸ்துவின் பாடல்கள், யேசு கிறிஸ்துவின் பிறப்பு நாடகம், பரதநாட்டியம், நாட்டார் கூத்து போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.வரதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயளாலருமான யசோதரா உதயகேமாரும், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச உதவி செயலாளர் நேசகுமார் செல்வரட்ணமும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அத்துடன் இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஜனனம் அறக்கட்டளை முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் முகுந்தகஜன், பிரதேச மக்கள் என பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினரும் ஜனனம் அறக்கட்டளை முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளருமான முகுந்தகஜன் 135 மாணவர்களுக்கு பாடசாலை புத்தக பைகளை அன்பளிப்பாக வழங்கி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா போன்று ஜப்பானிலும் கடும் பனிப் பொழிவு;17பேர் சாவு!

## 93பேருக்கு காயம்; போக்குவரத்துப் பாதிப்பு




டோக்கியோ, டிச.27

அமெரிக்காவில் சில நாள்களாகக் கடுமையான குளிர் தாக்கி வருகிறது. 'வெடிகுண்டு சூறாவளி' எனப்படும் பனிப்புயலால் இதுவரை 39 பேர் அங்கு உயிரிழந்து உள்ளனர் என்ற தகவல்கள் நேற்றையதினம் வெளியாகியிருந்தன.

இந்தச் சூழலில், ஜப்பானின் வடபகுதிகளில் கடந்த வார தொடக்கத்தில் இருந்தே கடுமையான பனிப்பொழிவு காணப்படுகிறது. இதனால், சாலைகள், நெடுஞ்சாலைகளில் பனி படர்ந்து காணப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக நூற்றுக்கணக்கான வாகனங்கள் வழியிலேயே தேங்கி விட்டன எனவும், பொருகள் விநியோக சேவையும் முடங்கி உள்ளது எனவு கூறப்படுகின்றது.

இந்நிலையில், ஜப்பானில் கிறிஸ்மஸ் வாரஇறுதியில் கடும் பனிப்பொழிவுஏற்பட்டதுடன், இதனால் ஏற்பட்ட மொத்த உயிரிழப்பு 17 எனவும் கூறப்பட்டது.

மேலும், 93 பேர் காயமடைந்து உள்ளனர். ஆயிரக் கணக்கான வீடுகளில் மின்சாரம் இன்றில் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. பலர் தங்களது குடியிருப்பின் மேற்பகுதியில் உள்ள பனிக்குவியலை அப்புறப்படுத்தும்போது தவறிவிழுந்தோ அல்லது மேற்கூரையில் இருந்து விழும்

பெரும் பனிக்கட்டிகளின் கீழே சிக்கி, புதைந்தோ உயிரிழந்து உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதனால், பனிக்கட்டிகளை நீக்கும்போது கவனத்துடன் செயல்படும் படியும் மற்றும் தனியாக அந்த பணியில் ஈடுபட வேண்டாம் என்றும் நகராட்சி அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்து உள்ளனர். ஜப்பானின் வடகிழக்கின் பல பகுதிகளில் இந்தப் பருவத்தில் சராசரியை விட 3 மடங்கு அதிக பனிப்பொழிவு காணப்படுகிறது. இரண்டரை அடி உயரத்துக்கு பனிக்குவியல்கள் காணப்படுகின்றன. இதில், மின் பகிர்மான கோபுரம் மீது பனிப்பொழிவு ஏற்படுத்திய பாதிப்பினால் கிறிஸ்மஸ் நாளன்று காலையில், 20 ஆயிரம் பேர் மின்சாரம் இன்றி தவித்தனர் என்றும்,பின் நிலைமை சீர் செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், 20க்கும் மேற்பட்ட ரெயில் மற்றும் விமான சேவைகள் ரத்து செய்யப்பட்ட நிலையில், நிலைமைகள் சீர்செய்யப்படுவ தாகத் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்லாமாபாத்தில் பயங்கரவாத தாக்குதல் நடத்த வாய்ப்பு; அமெரிக்கா எச்சரிக்கை!




இஸ்லாமாபாத், டிச.27

பாகிஸ்தானில் சமீப வாரங்களாக தொடர்ச்சியாக பயங்கரத் தாக்குதல்கள் அரங்கேற்றப்பட்டு வருகின்ற நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன்பு அந்த நாட்டின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நாடாளுமன்றத்துக்கு அருகே நடத்தப்பட்ட கார் குண்டு வெடிப்பில் பொலிஸ் அதிகாரி ஒருவர் பலியாகினர். இந்த தாக்குதல் அங்கு கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் இஸ்லாமாபாத்தில் மீண்டும் பயங்கரவாத தாக்குதல் நடத்த வாய்ப்பு இருப்பதாகவும், குறிப்பாக அமெரிக்கர்களை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்படலாம் என்றும் அமெரிக்கா எச்சரித்துள்ளது. இதுகுறித்து இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள எச்சரிக்கை செய்தியில், விடுமுறை நாள்களில் இஸ்லாமாபாத்தில் உள்ள மேரியட் ஹொட்டலில் அமெரிக்கர்களைத் தாக்க மர்ம நபர்கள் திட்டமிட்டிருக்கின்றனர் என அமெரிக்க அரசுக்கு தகவல் கிடைத்திருக்கிறது. எனவே அந்த ஹோட்டலுக்கு செல்வதை அமெரிக்கர்கள் முற்றிலுமாக தவிர்க்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மேலும் விடுமுறை நாள்களில் இஸ்லாமாபாத்தில் அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு தனது பணியா ளர்களையும் அமெரிக்க தூதரகம் வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## மாலைதீவு முன்னாள் அதிபருக்கு 11ஆண்டுகள் சிறைத் தண்டனை

மாலே, டிச.27

மாலைதீவின் அதிபராக கடந்த 2013 முதல் 2018 வரை பதவி வகித்த அப்துல்லா யாமீன் தன்னுடைய பதவி காலத்தில் அரசுக்கு சொந்தமான தீவு ஒன்றை குத்தகைக்கு அளிக்க லஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக அவர் மீது ஊழல் வழக்கு தொடரப்பட்டு, நீதிமன்றில் விசாரணை நடந்து வந்தது.

இந்த நிலையில் வழக்கின் இறுதி விசாரணை நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் அப்துல்லா யாமீன் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டமையைத் தொடர்ந்து, அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். அதை தொடர்ந்து, இந்த வழக்கில் சட்டவிரோத பணப் பரிவாத்தனை குற்றத்துக்கு 7 ஆண்டுகள், லஞ்சம் பெற்ற குற்றத்துக்கு 4

ஆண்டுகள் என அப்துல்லா யாமீனுக்கு மொத்தம் 11 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

ஊழல் வழக்கில் அப்துல்லா யாமீனுக்கு சிறை தண்டனை விதிக்கப்படுவது இது முதல் முறையல்ல. அதிபராக இருந்தபோது அரசு பணத்தை சொந்த ஆதாயத்துக்கு பயன்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் கடந்த 2019 ஆம் ஆண்டு அவருக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், அவருக்கு எதிரான ஆதாரங்களில் குறைபாடுகள் உள்ளன எனவும், குற்றச்சாட்டுகள் முழுமையாக நிரூபிக்கப்படவில்லை என்றும் கூறி, 2 ஆண்டுகளுக்கு பிறகு அந்த தீர்ப்பை அந்த நாட்டு உச்சநீதிமன்றம் ரத்து செய்தமை குறிப்பிடத்தக்கது.

## கனடாவையும் தாக்குகிறது பனிப்புயல் இதுவரை நால்வர் பலி 50 பேர் காயம்!

ஒட்டாவா, டிச.27

அமெரிக்காவில் வீசி வரும் கடுமையான பனிப்புயல் அங்குள்ள பல்வேறு மாகாணங்களை புரட்டிப் போட்டு வருகின்ற நிலையில், இந்தப் பயங்கர பனிப்புயல் அமெரிக்காவின் அண்டை நாடான கனடாவையும் பாதித்து வருகிறது. பிரிட்டிஷ்கொலம்பியா, மாண்ட்ரீல் உள்ளிட்ட பல மாகாணங்கள் பனிப்புயலின் தாக்கத்தை எதிர்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள கெலோவானா நகரில் இருந்து வான்கூவர் நகர் நோக்கி பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. பனிப்புயலால் சாலை முழுவதும் பனிக்கட்டியாய் மாறியிருந்தமையால் வீதியில் சென்ற பஸ் பனியில் சறுக்கிகவிழ்ந்தது. இதில் பஸ் பல முறை உருண்டது.

இந்தக் கோர விபத்தில் 4 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 50 க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் உடனடியாக மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது.





# கங்கை கழிவு நீரை அகற்ற ரூபா 2700 கோடி ஒதுக்கீடு

லக்னோ, டிச.27

உத்தர பிரதேசம், ஜார்க்கண்ட், பீகார் உள்ளிட்ட வட மாநிலங்களில் உள்ள கங்கை ஆற்றுப் படுகையை சுத்தப்படுத்தும் நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. இதற்காக கங்கை தூய்மை தேசிய இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் 46 ஆவது செயற்குழு கூட்டம் தலைமை இயக்குநர் ஜி அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது. அப்போது உத்தரப் பிரதேசம், பீகார், ஜார்கண்ட் மற்றும் மேற்கு வங்கத்தில் ரூ 2,700 கோடிக்கும் அதிகமான மதிப்பீட்டில் கங்கை படுகையில் கழிவு நீரை அகற்றும் உள்கட்டமைப்பு தொடர்பான 12 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதன்படி உத்தரப்பிரதேசத்தில் 3 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில் பிரயாக்ராஜில் மட்டும் ரூ. 475.19 கோடி செலவில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதேபோல் பீகாரின் தௌத் நகரிலும், ரூ. 42.25 கோடி செலவிலும், மோத்திகரில் 149.15 கோடி செலவிலும் திட்டங்கள்

நிறைவேற்றப்படுகின்றன.

அத்துடன், மேற்கு வங்கத்தில் ரூ. 653.67 கோடி செலவில் ஆதிகங்கா ஆற்றின் மறுசீரமைப்பு திட்டத்தற்கும் இந்த கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக மத்திய ஜல்சக்தித்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளாடைக்குள் தங்கம் வைத்து கடத்திய 19வயதுப் பெண் கைது

மலப்புரம், டிச.27

கேரள மாநிலம் மலப்புரம் அருகே உள்ள கரிப்பூர் சர்வதேச விமானநிலையத்தில், நேற்றையதினம் ஓர் இளம்பெண் துபாயில் இருந்து தங்கம் கடத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது

செய்யப்பட்டுள்ளார்.

காசர்கோடு பகுதியை சேர்ந்த அந்த பெண்ணின் பெயர் ாலா என்றும், 19 வயதான அவர் துபாயில் இருந்து இந்த தங்கத்தை கடத்தி வந்தார் எனவும் தெரியவந்தது.

நேற்று முன்தினம் விமானத்தில் வந்து இறங்கிய அந்த இளம் பெண்ணை சுங்க அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அப்போது சோதனைக் கருவி, அவரிடம் தங்கம் இருப்பதற்கான எச்சரிக்கை ஒலியை எழுப்பியது.

ஆனால் அவர் தங்கம் தன்னிடம் இல்லை என்று மறுத்தார்.

இதனால் தீவிர சோதனைக்கு உட்படுத்தியபோது தங்கத்தை பசைவடிவில் மாற்றி 3 பாக்கெட்டுகளில் அடைத்து, அதை உள்ளாடைக்குள் வைத்து தைத்து மறைத்து எடுத்து வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அவரை பொலிசார் கைது செய்தனர். மேலும், பிடிபட்ட தங்கம் 1.9 கிலோ என்றும் இதன் மதிப்பு ரூ.1 கோடிக்கு அதிகம் என்றும் பொலிஸார்வ்தெரிவித்துள்ளனர்.








# இந்நதியாவில் தேயிலைத் தோட்டத்தில் கிடந்த சீன வெடிகுண்டுகளால் பதற்றம்!

திப்ருகர், டிச.27

அசாம் மாநிலம் திப்ருகர் மாவட்டத்தின் தெற்கு ஜலன் பகுதியில் ஒரு தேயிலைதோட்டம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவில் வெடிகுண்டு போன்ற மர்ம பொருள்கள் கிடப்பதை அங்கு வேலை செய்யும் பணியாளர்கள் பார்த்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

உடனே சம்பவ இடம் விரைந்த பொலிஸார் அங்கு கிடந்த பொருள்களைக் கைப்பற்றினர்.

அதில் 2 சீன கையெறி குண்டுகள், ஏ.கே. 47 துப்பாக்கியின் 2 தோட்டா குப்பிகள் மற்றும் 12 தோட்டாக்கள் இருந்தன.

இதையடுத்து கைப்பற்றப்பட்ட வெடிகுண்டு வகைகளை எந்த அமைப்புப் பயங்கரவாதிகள்

பயன்படுத்துவார்கள் என்பது குறித்து பொலிஸார் விசாரணையில் இறங்கினர். சந்தேகமுள்ள சிலரிடம் விசாரணை நடத்தப்பட்டு உள்ளது, ஆனால் யாரையும் கைது செய்யவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# புதிய வகை கொரோனா அச்சுறுத்தலை தொடர்ந்து இந்தியா முழுவதும் இன்று நோய் தடுப்பு ஒத்திகை!

புதுடில்லி, டிச.27

சீனாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் உருவான கொரோனா வைரஸ் கடந்த 3 ஆண்டுகளாக உலக நாடுகளை பீதியிலேயே வைத்திருக்கிறது. உலகம் முழுவதும் பல கோடி மக்களை பாதித்த இந்த வைரஸ், லட்சக்கணக்கான மக்களின் உயிரையும் காவு வாங்கி விட்டது. இந்த எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்துவருகிறதுடன் இந்த பாதிப்புகள் ஒருபுறம் இருக்க, மறுபுறம் கொரோனா வைரஸ் அடிக்கடி மாறுபாடு அடைந்து புதியதிரிவுகளாக உருவாகி மேலும் அச்சுறுத்தலைக் கூட்டி வருகிறது.

அந்த வகையில் பி.எபவ்.7 என்ற பெயரில் புதிய வகை கொரோனா வைரஸ் தற்போது உலக

நாடுகளை அச்சுறுத்திவருகிறது. கொரோனாவின் தாயகமானசீனாவில் இந்தவைரஸ்கோரத்தாண்டவம் ஆடி வருகிறது. இப்படி உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் இந்த

பி.எவ்.7 ரக கொரோனா இந்தியாவிலும் ஏற்கனவே பரவ ஆரம்பித்துவிட்டது.

குஜராத், ஒடிசாவில் இந்த தொற்று பாதித்தவர்கள் கண்டறியப்பட்டு உள்ளனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது. இதைப்போல நாட்டில் நிகழும் தினசரி பாதிப்பு எண்ணிக்கையும் சராசரியாக 200 என்ற எண்ணிக்கையில் நீடிக்கிறது. நேற்று காலை நிலைவரப்படி 24 மணி நேரத்தில் 196 பேர் தொற்றுக்கு ஆளாகி இருந்தனர். இதனால் இந்தியாவில் மீண்டும் ஒரு கொரோனா பேரிடர் நிகழாதவாறு தடுக்க மத்திய அரசு தயாராகி வருகிறது. இது தொடர்பாக பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டு உள்ளது.

இதில் முக்கியமாக, மேற்படி புதியவகை தொற்று கண்டறியப்பட்ட நாடுகள் உள்பட வெளிநாடுகளில் இருந்து இந்தியா வரும் பயணிகளுக்கு கொரோனா பரிசோதனை நடத்த

அறிவுறுத்தி உள்ளது. சர்வதேச விமான நிலையங்களில் இந்த பரிசோதனை வேகமடைந்து இருக்கிறது. அத்துடன் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசஅதிகாரிகளுடன் சுகாதாரத்துறை அமைச்சகம் சார்பில் தொடர்ந்து ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு புதியவகை கொரோனா குறித்து உார்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் கொரோனாவால் ஏற்படும் எத்தகைய நெருக்கடிகளையும் எதிர்கொள்ள சிறப்பாக தயாராகும் வகையில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில்நோய்த்தடுப்பு ஒத்திகை நடத்த மத்திய அரசு அறிவுறுத்தி இருக்கிறது. அதன்படி இந்த பிரமாண்ட மருத்துவ ஒத்திகை இன்று செவ்வாய்க்கிழமை நாடு முழுவதும் ஆரம்பிக்கின்றதாகக் கூறப்பட்டுள்ளது.



# புளுகுநாவைக்குளம் புனரமைப்பு 7,000 ஏக்கர் வயல் பயனடையும்







(வி.ரி.சகாதேவராஜா)

கொக்கட்டிச்சோலை தாந்தாமலைப் பகுதியிலுள்ள புளுகுநாவைக்குளம், கங்காணியார்குளம் ஆகிய நீர்ப்பாசன குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இக் குளங்களிலிருந்து நீர்ப்பாய்ச்சுதல் இலகுவாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் அமைவதற்கான புனரமைப்பு வேலைகள் தற்போது சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

கடந்த வருடம் புளுகுநாவைக்குளத்தின் நீர்க்கொள்ளளவை அதிகரிப்பதற்கான புனரமைப்புப் பணிகள் முடிவடைந்திருந்தன.

இவ்விரு குளங்களினதும் புனரமைப்பினால் சுமார் 7 ஆயிரம் ஏக்கர் வயல் காணிகள் பயன்பெறுகின்றன. இதனால் மட்டு.மாவட்ட நெல் உற்பத்தியும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி திட்டங்களுக்கான நிதிகளைப் பெறும் வழிகளைக்கண்டுபிடித்து செயற்படுத்திவருகின்ற மாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி எஸ். இராஜகோபாலசிங்கம் மற்றும் பட்டிருப்புப்பிரிவு நீர்ப்பாசனப்பொறியியலாளர் எந்திரி கே. சுபாகரன் ஆகியோர் பாராட்டப்பட்டுவருகின்றனர்.

புளுகுநாவைக்குளத்தின்கீழான 14 விவசாயிகள் அமைப்புக்கள் சார்பாக கிளாக்கொடிச்சேனை கமக்காரர் அமைப்பின் தலைவரும் முன்னாள் தவிசாளரும் அதிபருமான சிவஞானம் அகிலேஷ்வரன் இந்தப் பொறியியலாளர்களுக்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் களுவாஞ்சிக்குடியில் அனுஷ்டிப்பு









(வி.ரி. சகாதேவராஜா)

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு மண்முனை தென் எருவில்பற்று பிரதேசசெயலகமும், பிரதேச மாற்றுத்திறனாளிகள் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் களுவாஞ்சிகுடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

சமத்துவமான உலகத்தை வளர்ப்பதில் புத்தாக்கத்தின்வகிபங்கு உள்ளடங்கியவளர்ச்சிக்கான உருமாறும் தீர்வுகள் எனும் தொனிப்பொருளில் அமைந்த இந்நிகழ்வில் சிமிர்னா விசேட தேவையுடைய பிள்ளைகள், புகலிடம் விசேட தேவையுடைய பிள்ளைகள் மற்றும் மட்டக்களப்பு பட்டிருப்பு மகிழூர்முனை சக்தி வித்தியாலய விசேட தேவையுடைய மாணவர்களினால் ஆற்றுகை செய்யப்பட்ட நிகழ்வுகள் கலந்துகொண்டோர் அனைவரினதும் பாராட்டுதல்களை பெற்றது.

இதன் போது முன்மாதிரியான சர்வதேச பெண் தலைமைத்துவ விருதினை பெற்றமைக்காக மண்முனை தென் எருவில்பற்று பிரதேச மாற்று திறனாளிகள் சங்கத்தினரால் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் அவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் சமூக சேவைகள் உத்தியோகத்தர் இ. கிருபாகரன், களுதாவளை பிரதேச சபை செயலாளர் , அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமூக சேவை) திருமதி. க .மனோகரன், மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் (சமூக சேவை) திருமதி அ . சந்திரகுமார், மாவட்ட மாற்று திறனாளிகள் சங்க தலைவர், மண்முனை தென் எருவில்பற்று பிரதேச மாற்று திறனாளிகள் சங்கத்தினர், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டி ருந்தனர்.

## 'முன்மாதிரி மிக்க மாணவர்கள்' விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சி





நூருல் ஹுதா உமர்

சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்களமானது, தேசிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கான 'முன்மாதிரி மிக்க மாணவர்கள்' எனும் கருப்பொருளின்கீழ் விழிப்புணர்வு செயலமர்வுகளை நடத்தி வருகின்றது. அதன் தொடர்ச்சியாக இறக்காமம் பிரதேச செயலகத்திற்கான விழிப்புணர்வு செயலமர்வானது, சது/அமீரலிபுரம் வித்தியாலயத்தில் செவ்வாய்க் கிழமை பாடசாலை முதல்வர் எம்.எஸ். லாஹிர் தலைமையில் இடம்பெற்றது.

சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆர்.எஸ். ஸபறுல் ஹஸீனாவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு செயலமர்விற்கு வளவாளராக உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப் கலந்துகொண்டு 'முன்மாதிரி மிக்க மாணவர்கள்' எனும் கருப்பொருளின் கீழ் விழிப்புணர்வு செயலமர்வை நடாத்தினார். மேலும் இந்நிகழ்வில், பொறுப்பாசிரியர் ஏ.சல்மான், உளவளத்துணை ஆசிரியை உட்பட பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் எஸ். றிஸ்மியா ஜஹான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## பெண்களுக்கான டிஜிடல் அறிவை மேம்படுத்துவதற்கான செயலமர்வு





(ஹஸ்பர்)

பெண்களூக்கான டிஜிடல் அறிவை மேம்படுத்துதல் தொடர்பிலான செயலமர்வொன்று திருகோணமலையில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் நேற்று இடம் பெற்றது. இந்த நிகழ்வு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (ஸீபுய்ய்சி) அமைப்பின் ஏற்பாட்டில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மகீன் அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க ஜனனி திட்டம் எனும் கருப்பொருளின் கீழ் இடம் பெற்றது. சிவில் சமூக பெண் பிரதிநிதிகளூக்காக இடம் பெற்ற இந்தச் செயலமர்வில் பெண்களின் அரசியல் உரிமைகள் மற்றும் சமூக வலைத்தளங்களின் பாவனை, வெறுக்கத்தக்க பேச்சு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் பரந்துபட்ட தெளிவினை வளவாளராக கலந்து கொண்ட உதவி தேர்தல் ஆணையாளர் பண்டார மாபா திறம்பட தெளிவுபடுத்தினார். நாளாந்தம் பெண்கள் பலவாறாக பாதிக்கப்படுகிறார்கள். இதில் இருந்து மீளவும் தகவல் தொழில் நுட்ப ஊடாக புதிய அறிவினை வளப்படுத்திக் கொள்ளவும் இந்த திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்வில் கெபே அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் ஆர்.எம்.ராபில், பெண் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என சுமார் 30க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு; மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை!



## எரிக் சொல்ஹெய்ம் ஆலோசனை

இனப்பிரச்சினை தொடர்பிலான பேச்சுகு தாம் மத்தியஸ்தம் வகிக்கப் போவதில்லை என ஜனாதிபதியின் சர்தேச காலநிலை ஆலோசகரும் நோர்வையின் முன்னாள் விசேட சமாதான தூதுவருமான எரிக் சொல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்..

இனப்பிரச்சினை தொடர்பிலான பேச்சுக்கு நோர்வே மாத்திரமல்லாமல் வேறு எந்தவொரு மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தமும் தற்போது தேவை இல்லை என எரிக் ஹொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு உள்ளக ரீதியில் தீர்வு காண்பதற்கான சூழ்நிலைகள் தற்போது உருவாகியுள்ளன எனவும் அதன்படி பேச்சுகளை முன்னெடுத்து நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைபல்லினஅடையாளங்களைக் கொண்ட நாடு என்பதால் அனைத்து இனங்களின் அபிலாஷைகளும் பூர்த்தி செய்யப்படும் வகையில் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## துன்னாலை – சக்குச்சம்பாதி பகுதியில் போதைப் பொருளுடன் ஒருவர் கைது!

யாழ்.துன்னாலை – சக்குச்சம்பாதி பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவா நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என நெல்லியடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து சுமார் 5 கிராம் 320 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ள நிலையில் சந்தேகநபரை பருத்தித்துறை நீதிமன்றில் நெல்லியடி பொலிஸார் முற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புத்தாண்டில் அணிய ஆடை திருடிய சகோதரிகள் கண்டியில் கைதாகினர்!

கண்டியில் உள்ள ஆடை விற்பனை நிலையம் ஒன்றில் சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடைகளைத் திருடிய குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கண்டி தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் புத்தாண்டுக்கு அணிவதற்காகவே இவ்வாறு ஆடைகளைத் திருடியதாக சந்தேக நபர்கள் இருவரும் கூறினர் எனக் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சகோதரிக்கு 28 வயது என்றும் அவரது தங்கைக்கு 25 வயது எனவும் கண்டி தலைமையக பொலிஸ் அதிகாரிஒருவர்தெரிவித்துள்ளார்.

## கணவரைமிரட்டி மனைவிமீது துஷ்பிரயோக முயற்சி யாழில் ஒருவர் கைது ; இருவர் தலைமறைவு!

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கணவனின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி மனைவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முயற்சித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் மேலும் இருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

கடந்த சில தினங்களுக்கு முன்னர், இரவு வேளை வீடொன்றினுள் அத்துமீறி கூரிய ஆயுதங்களுடன் நுழைந்த மூவர் , வீட்டில் இருந்த கணவனின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி , மனைவியை துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முயற்சித்துள்ளனர். இதன்போது, அவர்கள் அபய குரல் எழுப்பவே, வீட்டினுள் நுழைந்த மூவரும், அவர்களை தாக்கி விட்டு அங்கிருந்து தப்பி சென்றனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏனைய இருவரும் தலைமறைவாகி உள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள அதேவேளை, தலைமறைவாகியுள்ள இருவரையும் கைது செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.



## நாட்டின் அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி கருத்து கேலிக்குரியது!

### ஆனந்தசங்கரி காட்டம்




75 ஆண்டுகளாக தீர்த்து வைக்க முடியாத இனப் பிரச்சினையை எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னதாக தீர்த்துவைக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளமை கேலிக்குரியது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி கூறியுள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல்வாதிகளில் வயதில் முதிர்ச்சியடைந்த என்னிடம் இது தொடர்பில் புதிய சிந்தனைகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடவில்லை எனவும் குற்றம் சுமத்தினார்.

அன்று நாடாளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷ ஒற்றை ஆட்சியையும் ரணில் விக்கிரமசிங்க சமஷ்டியையும் முன்வைத்தனர்.

அவ்வாறாக போர் நிலவிய நேரத்தில் சம்பந்தனும் திருட்டு தனமாக நாடாளுமன்றம் சென்ற 22 பேரும் மக்களிடம் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு பிரசாரம் செய்தனர். இதனால் ரணில் தோற்றார். அவர்களை நம்பி மக்களும் வாக்களித்தனர். சமஷ்டியை செல்லா காசாக்கினார்கள்.

அன்று சமஷ்டி வேண்டாம் என்று பிரசாரம் செய்த அரசியல் தலைவர்கள், இன்று நானா நீயா என்று போட்டி போடுகிறார்கள்.

2004 ஆம் ஆண்டு தேர்தலில் விடுதலை புலிகளையும் உள்ளடக்கியதாக அனைவரும் ஒன்றாக செயற்பட வேண்டும் என்று உதய சூரியன் கொடி கேட்டு கொண்டது. ஆனால் சம்பந்தன் பிரபாகரனை ஒரு பக்கமாகவும் தானும் சேனாதிராஜாவும் தமிழ்ச்செல்வனோடும் இணைந்தனர்.

எம் இனத்தை காட்டி குடுத்த சம்பந்தன் 2004 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக நாடாளுமன்றத்துக்கு சென்றவர், நாடாளுமன்றத்தில் இருக்க தகுதி அற்றவர். இந்த பிரச்சினை பற்றிய தைகளை நிறுத்துங்கள் கதைத்து ஒன்றும் ஆகப்போவதில்லை. – என்றார்.

## அரசியல் கைதிகளின் விடயத்தில் தமிழ்க் கட்சிகள் சுயநல அரசியல் நோக்கத்துடன் செயற்படக்கூடாது

### அனந்தி சசிதரன் 'அட்வைஸ்'



அரசியல் கைதிகளின் விடயத்தில் தமிழ்க் கட்சிகள் சுயநல அரசியல் நோக்கத்துடன் செயற்படக் கூடாது என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்அனந்திசசிதரன்கேட்டுக்கொண்டுள்ளார். யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர் –

ஜனாதிபதியுடன் இடம்பெறும் சந்திப்பில் முதலாவதாக இந்த பிரசினையை முன்வைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுக்கு செல்வதற்கு முன்னர், தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என தமிழ் தரப்புக்கள் கூற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுசிறைகளில்உள்ளவர்களின் உண்மையான விவரம் வெளிவர வேண்டும் என்றும் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

## 5 கோடி ரூபா பெறுமதியிலான அரிசி மோசடி சதொச அ'புர களஞ்சிய முகாமையாளர் கைது!

அநுராதபுரம் சதொச நிறுவனத்தில் சுமார் ஆறு கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான நாடு மற்றும் சம்பா அரிசியை மோசடி செய்ததாக கூறப்படும் வழக்கு தொடர்பில் நீண்ட விசாரணையின் பின்னர் சந்தேகத்தின் பேரில் இரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அநுராதபுரம் சதொச களஞ்சிய முகாமையாளர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

களஞ்சியசாலை, அநுராதபுரம் பிரதான நீதிவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதி நாலக ஜயசூரியவே சந்தேக நபரை ஜனவரி மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சந்தேக நபர் வெளிநாடு செல்வதை தடுக்கும் வகையில் கட்டுநாயக்க மற்றும் மத்தல சர்வதேச விமான நிலையங்களின்குடிவரவு குடியகல்வு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
24
05
1940

உதிர்வு
26
12
2022

## அமரர் மயில்வாகனம் இரத்தினசிகாமணி

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

யா/ கம்பர் மலை வித்தியாலயம் - கொம்மந்தறை

எமது பூபாள ராகங்கள் அமைப்பாளர்களில் ஒருவரும், எங்கள் பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரும் ஆகிய திரு. இரத்தினசிகாமணி சகிதன் அவர்களின் பாசமிகு தந்தையாரும், எமது கம்பர்மலை வித்தியாலயம் - கொம் மந்தறை பாடசாலை அபிவிருத் திச் சங்க முன்னாள் நிர்வாக சபை உறுப்பினரும், எங்கள் பாடசாலையில் நீண்ட காலம் சேவையாற்றி இளைப்பாறிய ஆசிரியரு மான அமரர் மயில்வாகனம் இரத்தினசிகாமணி அவர்கள் 26.12.2022 அன்று காலமானார்.

அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

- பூபாள ராகங்கள் விழாக்குழு -
கம்பர்மலை வித்தியாலயம் - கொம்மந்தறை.

## தமிழ்த் தேசியக் கட்சியின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஓரணியாக – கூட்டமைப்பாகப் போட்டியிடுவதற்கான சாத்தியங்கள் தொடர்பில் ஆராய்ந்திருந்தனர். இது தொடர்பில் சிவில் மற்றும் மதத் தலைவர்களிடம் கேட்டபோதே மேற் கண்டவாறு பதிலளித்தனர்.

அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அ.விஜயராஜ்,

தமிழ்த் தேசியம் என்ற போர்வையில் கடந்த 13ஆண்டுகளாக பிளவுபட்டு நிற்கின்றார்கள். உள் ளூராட்சித் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிடுவது தொடர்பான பேச்சுக்கள் மகிழ்ச்சியளிக்கின்றன. இதனை முழுமனதாக வரவேற்கின்றோம்.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிளவின் காரணமாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மூன்று ஆசனங்கள் சிங்கள அல்லது அரச சார்பு கட்சிகளுக்கு தாரைவார்க்கப்பட்டன. எதிர்காலத்தில் இந்த நிலைமை தோன்றாமலிருக்க ஒன்றிணைவு அவசியம்.

மக்கள் சலுகைகளுக்காக வாக்களிக்கும் கலாசார மும் இந்த ஒன்றிணைவு ஊடாக முடிவுக்கு வரலாம். தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவு என்பது தமிழ் மக்களுக்கு எப்போது நன்மையே பயக்கும் –என்றார்.

சிவகுரு ஆதின குருமுதல்வரும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரியக்கத்தின் தலைவரும ான வேலன் சுவாமிகள்,

தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய கட்சிகள் அனைத்து விடயங்களிலும் ஒன்றிணைந்து பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு தனித்துவம் ஒவ்வொரு நிலைப்பாடுகள், கருத்து வேறுபாடுகள் இருக்கும். இது எல்லாவற்றையும் கடந்து எங்களுடைய 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள், 3 இலட்சத் துக்கும் மேற்பட்ட பொதுமக்களுடைய உயிர்த் தி யாகங்கள், அர்ப்பணிப்புகள் வீண்போகாத வகையில் தமிழ்த் தேசிய பரப்பு ஒன்றாக வேண்டும் என்பதே எங்களுடைய உறுதியான நிலைப்பாடு.

இந்த ஆறு கட்சிகளுக்கு தோன்றியுள்ள எண்ணம் அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் வரவேண்டும் – என்றார்.

திருகோணமலைமறை மாவட்ட ஆயர் அருள்திரு நோயல் இம்மானுவேல், தமிழ்க் கட்சிகள் எமது மக் களின் நலன் மற்றும் எதிர்காலத்தை முன்னிறுத்தி ஒரு சரித்திரப்பூர்வமானசந்திப்பொன்றைநடத்தியுள்ளார்கள் என்று அறிகின்றேன். இது பெரிதும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

தேர்தல் என்று வரும் போது, கட்சிகள் பிளவுபட்டு நிற்பதால் வரக் கூடிய விளைவுகளை அனைவரும் அறிவர். தொடர்ந்து அதே பிழைகளை நாம் விடாமல் ஒன்றுபட்டு மக்களின் நலனையும் இருப்பையும் எதி ர்காலத்தையும் கருத்திற்கொண்டு ஒற்றுமையாகச் செயற்படுவது காலத்தின் தேவையாகவும் உள்ளது. இது மக்களின் தேவையாகவும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. எனவே, தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தமது பேதங்களைக் கடந்து மக்களின் நலனில் அக்கறையுள் ளவர்களாக செயற்படவேண்டும் என்பதே எமது தனிப்பட்ட விருப்பாகவும் வேண்டுதலாகவும் உள்ளது.

இந்த முயற்சியை முறியடிக்க பல தீய சக்திகள் செயற்படலாம். அவற்றையும் வென்று ஒற்றுமையாகச் செயற்பட வாழ்த்துகின்றேன் – என்றார்.

நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமி,

இன்றைய காலத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடுவது என்பது மிக முக்கியமானது. இப்போது அரசுடன் பேச்சு இடம்பெறுகின்றது.

தமிழ்க் கட்சிகள் ஒவ்வொன்றாகச் செயற்படுவது ஆரோக்கியமல்ல. ஒரே குரலில் பேசும்போதுதான் அது பலமாக இருக்கும்.

தீர்வுக்கான சாத்தியங்கள் இருப்பதாகச் சொல் லப்படும் இந்தச் சூழலில் நீங்கள் ஒன்றுபட்டு நின்று செயற்படவேண்டும் என்பதுதான் மக்களினதும் எங்களினதும் மனப்பூர்வமான விருப்பம் – என்றார்.

தென்கயிலை ஆதீனத்தின் குரு முதல்வர் தவத்தி ரு அகத்தியர் அடிகளார்,

இந்த ஒற்றுமையை மக்கள் எப்போதோ வலியுறுத்தி யிருந்தார்கள். ஆனால், கட்சிகள் இதனைப் பேச்சில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நடைமுறையில் செய்து காட்டவில்லை. ஆனால், இப்போது ஒன்றிணை வதற்காக பேசுகின்றார்கள். இது சிறப்பாக நடந்தால் எமது இனத்துக்கு எதிர்காலம் நன்மையாக அமையும். இவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை பொறுத்தி ருந்து பார்ப்போம் – என்றார்.

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் வே. பத்மதயாளன்,

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலிலே அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றாக இணைந்து பயணிப்பதற்கான முயற்சிகள் தொடர்பில் மகிழ்ச்சி அடைகின்றேன். பல்வேறு வேளைகளிலும் நாங்கள் உடைவுபட்டு பிளவுபட்ட எதனையும் சாதித்துக் கொள்ள முடியாது.

கட்சி ரீதியான வேறுபாடுகள் இருந்தாலும் தமிழ் ம க்களுடைய விடுதலைக்காகவும், பெரும் போர் முடிவடைந்து அதன் பின்னர் பல்வேறு விதமான அழுத்தங்கள் தாக்கங்கள் நிலவு நிலவுகின்ற சூழ்நிலையில் அரசியல் ரீதியான வேறுபாடுகள் களைந்து அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றாகப் பயணிக்கக்கூடிய கருத்துகளை அறிந்து, ஒரு புதிய பேராயராக உண்மையிலேயே நான் மகிழ்ச்சி அடை கின்றேன். அடுத்த தீர்மானங்களும் தீர்வுகளும் எதி ர்காலத்துக்கு பொருத்தமானதாக இருக்க வேண்டும் என நான் வேண்டுகின்றேன்.

ஏனென்றால் கடந்த காலங்களில் பல கசப்பான சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதோடு மக்களை மை யப்படுத்திய அரசியலை நான் வலியுறுத்து கின்றேன்.

மக்கள் பிரதிநிதிகளை மாத்திரம் அல்ல மக்களை மையப்படுத்திய ஒரு தலைமைத்துவம் உருவாக்கப்பட வேண்டும். இது ஒரு ஆரம்பமே. இனி வர இருக்கின்ற தேர்தல்கள் எல்லாம் மக்களுக்காகவும் எங்களுடைய விடுதலை உணர்வு சார்ந்ததாகவும் மக்கள் மை யப்படுத்தப்பட்டதாக இருக்கின்ற போது உண்மை யிலேயே அது பெரிய மாற்றத்தை உருவாக்கும்.

இந்தச் செயற்பாட்டை நான் உண்மையிலேயே ஆதரிக்கின்றேன். இந்தச் செயற்பாட்டில் ஈடுபடக்கூடிய ஒவ்வொரு தமிழ் அரசியல் கட்சிகளையும் நான் பாராட்டுகின்றேன். தொடர்ந்து மக்களுடைய வாழ்வியலுக்காக இவர்கள் பாடுபடுவதையிட்டு நான் வாழ்த்துகின்றேன் – என்றார்.

## பருத்தித்துறை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 19 ஆம் திகதி மீண்டு வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற் கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண் டிருந்த வேளை சிறிது நேரம் முன்னராக தவிசாளர் யோ. இருதயராஜா தனது பதவியில் இருந்து விலகுவதாக அறி வித்திருந்த நிலையில் தவிசாளர் இன்மை காரணமாக வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படாத நிலையில் இன்று வடக்கு உள்ளூராட்சி ஆணையா ளர் செ.பிரணவநாதன் தலைமையில் புதிய தவிசாளர் தெரிவு இடம்பெறுவதற் கான கூட்டம் கூட்டப்பட்டிருந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த முன்னாள் தவிசாளர் உட்பட நால்வரும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவருமாக ஐவர் சமூகமளித்தி ருந்தனர்.

இந்நிலையில், உள்ளூராட்சி ஆணையாளரால் மேலதிகமாக அரை மணி நேரம் வழங்கப்பட்டிருந்தது.

சற்று நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் மதனி நெல்சன், சுயேட்சைச் குழு உறுப்பினர் துலோசனா ஆகியோர் சமூகமளித்தனர்.

அவ்வாறிருந்தும் 15 உறுப்பினர் களை கொண்ட குறித்த பருத்தித்துறை நகர சபையில் 8 பேர் கூட்டம் ஒன்றை நடத்துவதற்குக் சமூகமளிக்க வேண்டும். ஆனால், 7 பேர் மட்டுமே சமூகமளித்தி ருந்த நிலையில் ஒரு கோரம் இன்மை யால் புதிய தவிசாளர் தெரிவு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித் தார். புதிய தவிசாளர் தெரிவுக்குப் பிறி தொரு திகதி அறிவிக்கப்படும் என்றும் கூறி கூட்டத்தை அவர் நிறைவு செய்தார்.

மேலும், இன்றைய தவிசாளர் தெரிவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் அறுவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் இருவருமாக 8 பேர் சமூகமளிக்கவில்லை.

இதேவேளை, பருத்தித்துறை பொலிஸ் நிலைய உப பரிசோதகர் சேந்தன் தலைமையிலான பொலிஸார் நகர சபை கட்டடத்தில் இன்று பாது காப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

## முல்லையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தபோது வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் அவரை கட்டிவைத்து கத்திமுனையில் அவர் அணிந்திருந்த நகைகள் அனைத் தையும் கொள்ளையடித் துள்ளதுடன், வீட்டில் குளிரூட்டியில் இருந்த மது பானங்களையும் எடுத்து அருந்தி விட்டுச் சென்றுள்ளார்கள்.

இந்தத் தகவலை முல்லைத்தீவுப் பொலிஸார் ஊடகங்களிடம் தெரி வித்தனர்.

## 3 நிலக்கரி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் குறிப்பிட்டார். இந்நிலையில், மின்சாரத் தடை நேரத்தில் அடுத்த மாதம் மாற்றம் ஏற்படக்கூடும் என்றும் அவர் மேலும் கூறினார்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.12.2022 இல் வெளியிடப்பெற்றது.